Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : திரு. பா.குமார்சிங்,

ந.க.எண்.1179/2024/எப்.1 நாள்– 31/01/2025

பொருள் மனைபிரிவு அங்கீகாரம் – தூத்துக்குடி மாவட்டம் – காயல்பட்டினம் நகராட்சி – சர்வே எண்கள் 401/1, 401/2, 0.55 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைபிரிவு அமைந்துள்ளது– தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டது– மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

பார்வை

1. திருமதி.ஆசியா உம்மாள், திரு.ஆறுமுக நயினார், மற்றும் திரு.மொகுதூம் இஃப்திகார் காயல்பட்டணம் ஆகியோரது விண்ணப்பம் நாள். 04.07.2024
2. அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 04.05.2017
3. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 09.12.2020
4. அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 16.07.2022
5. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தூத்துக்குடி அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம் எண். 3TPWRURG/THOOTHUKUDI //2024/TCP நாள் 13.06.2024
6. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி–2, நாள் 20,10,2022
7. தொடர்புடைய ஆவணங்கள்

ஆணை:

தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் நகராட்சி சர்வே எண்கள் 401/1, 401/2 பகுதியில் 0.55 ஏக்கர் பரப்பில் உள்ள மனைபிரிவு (20 மனைகள்) மனைபிரிவுகளாக அமைக்க பார்வை 1ல் காணும் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 04.05.2017 ன் படி, திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதி 3ன் படி பரிசீலனைக் கட்டணமாக ரூ. 20,000/– மற்றும் விதி 9ன் படி மனுதாரர் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத் தொகை 3% (மூன்று விழுக்காடு) தொகை ரூ.2500/–, மனைபிரிவு அங்கீகாரம் பெற ஏக்கர் ஒன்றிற்கு ரூ.25,000 வீதம் 0.55 ஏக்கருக்கு ரூ. 25,000/– மற்றும் அடிப்படை வசதிக்கான பராமரிப்பு வைப்புத் தொகையாக ரூ. 1,00,000/–, அடிப்படை வசதி தெரு விளக்கு மேற்கொள்வதற்கான தொகை ரூ.1,30,000/– மற்றும் விளம்பர பலகை வைப்பு தொகை ரூ.1500/– (மொத்தம் ரூ.2,79,000/–) வரைவோலை எண். 194115 நாள். 25.10.2024 ன் படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது தொழில்நுட்பம் (ம) மனை பிரிவு அங்கீகார எண். 82/2024, நாள். 13/06/2024ல் சிறப்பு நிபந்தனைகளின்படி, அங்கீகாரம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்வை 3ல் கண்ட அரசாணையின் படி,மாநகராட்சி/நகராட்சி பகுதிகளில் சாலைகள், குடிநீர்

குழாய் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை மனுதாரரே செய்வதற்கு ஒப்பு கொண்டதனடிப்படையில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.மேலும் பார்வை 6ல் கண்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி அவர்கள் மூலம் மூன்றாம் நபர் ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கூடுதல் நிபந்தணைகளுக்குட்பட்டு சர்வே எண்கள். 401/1, 401/2 ல் போடப்பட்டுள்ள 20 எண்ணம் குடியிருப்பு மனைகள் மனைபிரிவு செய்யப்பட்டதற்கு இதன் மூலம் அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. அங்கீகாரம் தொழில் நுட்ப அனுமதியும் மற்றும் மனை பிரிவு பிரிவு அங்கீகாரம் வழங்கிய எண். குறிப்பிட்டு விளம்பர போர்டு வைத்து புகைப்படம் எடுத்து கொடுக்க வேண்டும்.
2. அங்கீகாரம் வழங்கி பின்பு அல்லது தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட பின்பு மனை பிரிவு செய்யப்பட்டுள்ள அளவுகளில் எவ்வித மாற்றமும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தூத்துக்குடி அவர்களது முன் அனுமதி பெறாமல் செய்யக்கூடாது.
3. மனைபிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பிளாட்டுகளில் வீடு கட்டும் போது சம்பந்தப்பட்ட பிளாட் உரிமையாளர்கள் தனித்தனியே வரைபடம் கொடுத்து நகராட்சி மூலம் கட்டிட அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நில உரிமைதாரர் விற்பனை செய்யும் போது அறிவுறுத்த வேண்டும்.
4. நன்கொடை பத்திரம் மூலம் நகராட்சி அல்லது அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் குத்தகைக்கு விடவோ நில உரிமைதாரரே பிளாட் போட்டு விற்பனை செய்வதோ அல்லது சொந்தமாக எடுத்துக்கொள்ளவோ கூடாது இதில் நில உரிமைதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.
5. மனைபிரிவு செய்துள்ள சர்வே எண்கள். 401/1, 401/2 பகுதியில் 0.55 ஏக்கர் பரப்பிற்கு காலிமனை வரி செலுத்தப்பட வேண்டும்.

ஆணையாளர்
காயல்பட்டினம் நகராட்சி

பெறுநர்
திருமதி.ஆசியா உம்மாள், திரு.ஆறுமுக நயினார்
மற்றும் திரு.மொகுதூம் இஃப்திகார்,
155, குத்துக்கல் தெரு,
காயல்பட்டணம் 628 204

நகல் – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தூத்துக்குடி.
நகல் – வருவாய் ஆய்வாளர், காயல்பட்டணம் நகராட்சி
காலிமனை வரி விதிப்பு செய்திட,
நகல் – சார்பதிவாளர், பத்திர பதிவு அலுவலகம், காயல்பட்டணம்
நகல் – வட்டாச்சியர் திருச்செந்தூர்,
நகல் – நகராட்சி பொறியாளர்
அடிப்படைவசதிகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate